www.Padasalai.Net www.TrbTnpsc.com

VILLUPURAM DIST.

| தேர்வு எண் | | | | | | |
|---|---|---|---|---|---|---|

**வகுப்பு : 8**

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024-25

## தமிழ்

நேரம் : 2.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 100

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 12X1=12

1. பறவைகள் -------- பறந்து செல்கின்றன.
(அ) நிலத்தில் (ஆ) விசும்பில் (இ) மரத்தில் (ஈ) நீரில்
2. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற -------- காரணமாக அமைந்தது.
(அ) ஓவியக்கலை (ஆ) அச்சுக்கலை (இ) இசைக்கலை (ஈ) நுண்கலை
3. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம்
(அ) தலை (ஆ) மார்பு (இ) மூக்கு (ஈ) கழுத்து
4. முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் --------- யும் ஓட்டிவிடும்.
(அ) பாலனை (ஆ) காலனை (இ) ஆற்றலை (ஈ) நலத்தை
5. செவ்விந்தியர்கள் நிலத்தை --------- மதிக்கின்றனர்.
(அ) தாயாக (ஆ) தந்தையாக (இ) தெய்வமாக (ஈ) தூய்மையாக
6. உடல் நலம் என்பது ---------- இல்லாமல் வாழ்வது ஆகும்.
(அ) அணி (ஆ) பணி (இ) பிணி (ஈ) மணி
7. காந்தியடிகள் --------- போற்ற வாழ்ந்தார்.
(அ) நிலம் (ஆ) வையம் (இ) களம் (ஈ) வானம்
8. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது -------- நீட்சியாகவே உள்ளது.
(அ) மருந்தின் (ஆ) உடற்பயிற்சியின் (இ) உணவின் (ஈ) வாழ்வின்
9. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் -------- எனப்படும்.
(அ) முற்று (ஆ) எச்சம் (இ) முற்றெச்சம் (ஈ) வினையெச்சம்
10. கற்றவருக்கு அழகு தருவது ---------
(அ) தங்கம் (ஆ) வெள்ளி (இ) வைரம் (ஈ) கல்வி
11. என் நண்பர் பெரும் புலவராக இருந்த போதும் --------- இன்றி வாழ்ந்தார்.
(அ) சோம்பல் (ஆ) அகம்பாவம் (இ) வருத்தம் (ஈ) வெகுளி
12. கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ----------
(அ) இளமை (ஆ) முதுமை (இ) நேர்மை (ஈ) வாய்மை

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 3X1=3

13. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை களைந்தவர் --------
14. புகழாலும் பழியாலும் அறியப்படுவது ---------
15. சமையலறையில் செலவிடும் நேரம் -------- செலவிடும் நேரமாகும்.

**III. பொருத்துக.** 4X1=4

16. நடந்து – முற்றெச்சம்
17. பேசிய – குறிப்புப் பெயரெச்சம்
18. எடுத்தனன் உண்டான் – பெயரெச்சம்
19. பெரிய – வினையெச்சம்

**IV. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி.** 6X2=12

20. தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?
21. வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்த்திருத்தங்களில் எவையேனும் இரண்டினை எழுதுக.
22. ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் குறிப்பிடுகிறார்?
23. எதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்?
24. நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவ்வை?
25. நல்வாழ்விற்காக நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

26.யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?

27.யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?

V.எவையேனும் நான்கனுக்கு விடையளி. 4x2=8

28.எழுத்துக்களின் பிறப்பு என்றால் என்ன?

29.வினைமுற்று என்றால் என்ன?

30.எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

31. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?

32.வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?

VI.அடிபிறழாமல் எழுதுக. 4+2=6

33.அ) "உடலின் உறுதி உடையவரே" எனத் தொடங்கும் வருமுன் காப்போம் பாடலை எழுதுக.

ஆ) விலங்கொடு எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

VII.அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 7x1=7

34.சரியான மரபுச்சொல்லை தேர்ந்தெடுத்து எழுதுக.

பால் -------- (குடி / பருகு)

35.தொடரில் அமைத்து எழுதுக.

வேடிக்கை –

36.தமிழ் எண்ணுரு எழுதுக.

உலக ஓசோன் தினம் செம்டம்பர் – 16

37.உவமைத் தொடரைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.

உடலும் உயிரும் போல

38.கலைச்சொல் தருக.

Disease -

39.பாரதியார் பாடல்களின் இனிமைதான் என்னே? தொடர் வகையைக் கண்டறிந்து எழுதுக.

VIII.எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி. 6x4=24

40.தமிழ்மொழியை வாழ்த்தி பாரதியார் கூறும் கருத்துகள் யாவை?

41. எழுத்துச் சீர்த்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.

42.கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?

43.எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?

44.நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?

45.நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46.புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

47.வினையெச்சத்தின் வகைகள் யாவை?

IX.அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 3x8=24

48.அ) தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

49.அ) "வெட்டுக்கிளியும் – சருகுமானும்"- இக்கதையைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) மூளையின் செயல்கள் குறித்து தொகுத்து எழுதுக.

50.அ) "நான் விரும்பும் கவிஞர்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற தலைப்பில் பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com